# அழிவுகளை இப்போது அனுப்புவது தேவன் அல்ல.

*1யோவா 4:8* ***அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்.***

அது ஒரு அழகான குழந்தை. வயது 2 மாதம். எப்போதும் யாரைப்பார்த்தாலும் சிரிக்கும். வெள்ளையும் மஞ்சளும் கலந்த ஒரு நிறம். அதிகமாக அழுவது இல்லை. யார் எடுத்தாலும் சென்றுவிடும். எல்லோருக்கும் பிரியமான குழந்தை. எங்கு இருந்தாலும் ஒரு சந்தோஷமான ஆனந்தமான சூழ்நிலையை உருவாக்க வல்ல குழந்தை.

நான் அந்த வீட்டுக்குள் நுழைந்த போது உச்சி வேளை, அரபு நாட்டு கோடைக்கால வெயிலாக இருந்த போதிலும், ஒரு சில்லென்ற அதிர்வு உணர்வு. வெப்பத்தை விட சோகம் வீட்டுக்குள் நிறைந்திருந்தது. அங்கிருந்த எல்லோரும் அதிர்ச்சியில் உறைந்திருந்தனர். நான் அந்த தகப்பனை ஆறுதலாக அணைத்துக்கொண்ட போது, கண்ணீர் மல்க என்னை அணைத்துக்கொண்டார். மெல்ல "உங்களுக்கு சமாதானம்" என்ற அர்த்தத்தில் சில அரேபிய வார்த்தைகளை கூறிவிட்டு அமர்ந்தோம். உடைந்த குரலுடன் என்ன நடந்தது என்று அந்த நண்பர் சொல்ல ஆரம்பித்தார். தாயும் குழந்தையும் தூங்கிக்கொண்டிருந்தனர். அதிகாலை சுமார் 3 மணி அளவில் தாய் அந்த குழந்தைக்கு பாலூட்டினார்கள். பின் இருவரும் தூங்கி விட்டனர். தாய் காலை சுமார் 7 மணிக்கு எழும்பினார்கள். குழந்தையை பார்த்தார்கள். ஏதோ வித்தியாசம் தெரிய அசைத்து பார்த்தார்கள். ஒரு அசைவும் இல்லை. மூச்சு இல்லை. குழந்தையை எடுத்துக்கொண்டு அலறிய படி வெளியே ஓடி வந்தார்கள். ஒரு நண்பரின் உதயியுடன் மருத்துவமனையை அடைந்தார்கள். மருத்துவர்கள் பரிசோதித்து பார்த்து விட்டு, குழந்தை இறந்து வெகு நேரம் ஆகிவிட்டது என்று சொன்னார்கள்.

சில நிமிடங்களில் இந்த வாலிப தம்பதியின் வாழ்க்கை தலைகீழாகி விட்டது. குழந்தை போய்விட்டது. தன்னை படைத்த தன் தெய்வத்திடம் அந்த உயிர் பறந்து விட்டது. அந்த பச்சிளம் பால் மணம்... சிரிப்பு... ஆனந்த அழுகை... சத்தம்... விளையாட்டு பொம்மைகளின் மணியோசைகள்... எல்லாம் ஓய்ந்து ஒரு மயான அமைதி. அமைதி கூட திகிலூட்டுகிற ஒரு சூழ்நிலை.

ஒரு நண்பர் பேச ஆரம்பித்தார். அந்த தகப்பனை ஆறுதல் படுத்துகிற விதத்தில்.. " சகோதரா, கலங்காதீர்கள். இது எல்லாம் தெய்வத்தின் திட்டம். இதில் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. இது எல்லாம் தெய்வத்தின் அனுமதி இல்லாமல் நடக்காது. ஆகவே கலங்காதீர்கள் ". அங்கிருந்த மற்ற எல்லா நண்பர்களும் இதை ஆமோதித்தார்கள். ஆம்...ஆம் என்று. ஆனால் என் அடிவயிற்றின் ஆழத்தில் இருந்து ஒரு அலறல் எழுந்தது **" இல்லை....அப்படி இல்லை... இந்த குழந்தை இறந்தது தெய்வத்தின் திட்டம் அல்ல... தெய்வம் இதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது... ஒரு இரண்டு மாத அழகிய குழந்தையை மூச்சு திணறி மரிக்க வைத்துதானா தெய்வம் தன் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் ? ".** ஆனால் சூழ்நிலை, அந்த இடம் எல்லாவற்றையும் நினைவில் கொண்டு மிகுந்த சிரமத்துடன் அந்த அலறலை அடக்கிக்கொண்டேன். அது ஒரு அக்கினி அஸ்திரமாக மனதின் ஆழத்தில் போய் அமர்ந்து கொண்டது.............

அன்பான மக்கள். அழகான மனிதர்கள். எப்போதும் சிரித்த முகத்துடன் இருக்கும் சகோதரிகள். கொழு கொழு என்று, பார்த்தால், கன்னத்தை தொட்டுப்பார்க்க தோன்றும் குழந்தைகள். வழி கேட்டால் உடன் வந்து வழி காட்டும் ஜப்பானிய மக்கள். கடும் உழைப்பாளிகள். இந்தியாவுக்கு மிகுந்த பொருளாதார உதவிகளை செய்யும் நாடு. எங்கும் பூக்களும், அழகான வீடுகளும் நிறைந்திருக்கும் நாடு. இயற்கையின் அவலட்சணமான ஒரு கோரதாண்டவம் சுனாமி, நில நடுக்கம் என்ற பேரில் அரங்கேறியபோது... அழகான வீடுகளும், சாலைகளும், கட்டிடங்களும், தோட்டங்களும், சாதாரண காகிதம் போல கசக்கி எறியப்பட்டபோது.... வெள்ளை வெளேர் என்று இருக்கும் அந்த பிஞ்சு குழந்தைகளும், ஓடி விளையாடிக்கொண்டிருந்த சின்ன பிள்ளைகளும், படித்துக்கொண்டிருந்த மாணவ செல்வங்களும், மெல்ல நடந்து கொண்டிருந்த முதியவர்களும், சகோதரர்களும், சகோதரிகளும் சில நிமிடங்களுக்குள்ளாக பிணங்களாக, சிதைக்கப்பட்டு, சதைக்கப்பட்டு, நீருக்குள் அமுக்கப்பட்டு, மூழ்கடிக்கப்பட்டு, கொல்லப்பட்ட போது..... அந்த காட்சிகளை பார்த்து மனதில் எழுந்தது கோபமா ? சோகமா ? வருத்தமா ? கண்ணீரா ?. இனம் புரியாதா ஒரு உணர்ச்சி. என்னவென்று சொல்ல தெரியாமல் ஒரு தவிப்பு.

பூமியதிர்ச்சி...... சுனாமி....... யுத்தங்கள்......கலவரங்கள்.... கற்பழிப்புகள்...... கொலைகள்..... கொள்ளைகள்.... நோய்கள்.... பயங்கரவாதம்... மரணங்கள்... சோகம், துயரம். என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கும் அப்பாவி ஜனங்கள் ஒரு புறம். பலவிதமான விளக்கங்களை இதற்காக கொடுத்துக்கொண்டிருக்கும் அறிவாளிகள் மறுபுறம். சுனாமி, மழை, வறட்சி, நிலநடுக்கம் போன்றவற்றை அவ்விசுவாசிகள் கூட சில சமயங்களில் சரியாக சொல்லுகிறார்கள் இவை **"இயற்கையின் சீற்றம்"** அல்லது **"இயற்கை பேரழிவுகள்"** என்று. **இவற்றுக்கு மத்தியில் கிறிஸ்தவர்கள், விசுவாசிகள், பிரசங்கிமார்கள் சொல்லுகிற மிக மிக வேதனையான விளக்கம்,** ***" இவை எல்லாம் தேவன் செய்தது. அல்லது அவர் அனுமதித்தது ".*** **இதற்காக பழைய ஏற்பாட்டின் சில வசனங்களையும் எடுத்து உபயோகிக்கிறார்கள்.**

என்னுடைய வாழ்க்கையில், சிறுவயதில் இருந்தே இந்த போதனைகள், விளக்கங்கள் என் மனதில் தேவன் மேல் ஒரு ஆழ்ந்த வெறுப்பை ஏற்படுத்தி இருந்தன. “பச்சிளங்குழந்தைகளை கொல்லுகிறவரை அல்லது அக்கொலைகளை அனுமதிக்கிறவரை, துடிதுடித்து சாகும்படி நோய்களை கொடுக்கிறவரை அல்லது அந்த நோய்களை அனுமதிக்கிறவரை, நில நடுக்கங்களையும் சுனாமிகளையும் அனுப்பி லட்சக்கணக்கான மக்களை நொடியில் கொல்லுகிறவரை அல்லது அந்த கொடூரங்களை அனுமதிக்கிறவரை, கற்பழிப்பு, கொலை, வறுமை, துன்பம், துயரம், ....இவற்றை எல்லாம் கொடுக்கிறவரை அல்லது அனுமதிக்கிறவரை.....அல்லது **அதை தடுக்க முடிகிற சகலவிதமான அதிகாரமும் வல்லமையும் இருந்தும் தடுக்காமல் இருப்பவரை,** எப்படி ஒரு நியாயமான மனிதனால் வெறுக்காமல் இருக்க முடியும் ?.” இதை விடவும் பெரிய வேடிக்கை என்னவென்றால், " இதை எல்லாம் செய்கிற இந்த தேவனை உன் சொந்த ரட்சகராக ஏற்றுக்கொள்.... அவர் அன்பானவர்... கருணையானவர்..... உனக்காக மரித்தவர்.... " என்று இந்த கிறிஸ்தவர்களே அன்பாக உரைப்பது. இந்த தேவனை யார் தேவனாக ஏற்றுக்கொள்வார்கள் ?. உலகத்தின் எந்த ஒரு நாட்டு சட்டப்படியும் கொலை ஒரு பெரிய குற்றம். ஒரு மரணத்தை தடுக்கும் வல்லமை இருந்தும் அதை தடுக்காமல் இருப்பது கொலை போலவே வேறொரு குற்றம். இப்படி எல்லாம் செய்கிற ஒருவர் கைது செய்யப்பட வேண்டும் அல்லவா ?. குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட வேண்டும் அல்லவா ?. என் மனதில் இந்த கேள்விகள் அக்கினியாக எழும்பும்போதெல்லாம் ஒரு மெல்லிய மொழி இல்லாத ஒரு சத்தம் என் ஆத்மாவின் அடித்தழத்தில் கேட்பதுண்டு, ***" இல்லை மகனே... நான் இவற்றை எல்லாம் செய்ய வில்லை..... நான் அனுமதிக்கவும் இல்லை "....*** நான் உற்றுக்கேட்க நினைக்கும்போதெல்லாம், இடி முழக்கமாக கிறிஸ்தவ மதத்தின் சத்தம் கேட்கும். இந்த இடி முழக்கத்தில் அந்த மெல்லிய சத்தத்துக்கு நான் செவி கொடுக்க வில்லை. இந்த இடி முழக்கம், கொடூரமாயும், வேடிக்கை முழக்கமாக இருந்தாலும், என் மனதில் வேதனையையும், தேவன் மேல் வெறுப்பையும் ஏற்படுத்தியது. காலங்கள் கடந்தன, இந்த தேவனை என் ரட்சகராக ஏற்றுக்கொண்டேன். என் தேவனை மத போதனைகள் என்ற கண்ணாடி வழியாகவே பார்த்து புரிந்து கொண்டிருந்தேன்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு என் அருமை நண்பர் ஒருவர், நல்ல ஒரு அன்பான விசுவாசி, மற்ற விசுவாசிகளிடம் இருந்து ஒரு வேறுபாடு உள்ளவர். ஆவியின் கனி எப்போதும் அவரிடம் நிறைந்து காணப்படும். சுருக்கமாக சொன்னால் ஒரு உண்மையான விசுவாசி. ஒரு குறிப்பிட்ட விசுவாச சபையை சார்ந்தவர். சபைதலைவருக்கு அடுத்த இடத்தில் இருந்தவர். ஒரு நாள் திடீரென சுகவீனமாக இருப்பதாக தகவல் வந்தது, மருத்துவ மனைக்கு சென்று பரிசோதித்ததில் இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து இருப்பதாக தெரிவித்தார்கள். அவசரமாக இந்தியா அனுப்பி வைக்கப்பட்டார். நானும் இன்னொரு சகோதரியும் 21 நாட்கள் முழு உபவாசம் இருந்து அவருக்காக ஜெபித்தோம். சபையோர் அனைவரும் தினமும் கூடி கதறி ஜெபித்தார்கள். அவர் குணமாக வில்லை. மாற்று சிறுநீரகம் பொருத்தப்பட்டது. அதுவும் செயல்படாமல் பரிதாபமாக மரித்துப்போனார். என்னால் இந்த மரணத்தை ஏற்றுக்கொள்ளவே முடிய வில்லை. நாங்கள் கூடி ஜெபித்த போது மற்ற விசுவாசிகள் அனைவரும் சொன்னது, " அவரது நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிந்தது. தேவன் எடுத்துக்கொண்டார்... இதுவே தேவனுடைய சித்தம்... எல்லாரும் ஒரு நாள் மரிக்க வேண்டியதே ". அச்சமயத்தில் நானும் கேட்டேன் தேவனே ஏன் இப்படி எங்களை கைவிட்டீர் ?. என்னால் இனியும் தொடர்ந்து உபவாசம் இருக்க முடியாது, ஏன் இப்படி செய்தீர் ?. இந்த நொடியில் மீண்டும் என் ஆத்மாவின் அடித்தழத்தில், ஆழத்தில், காதுகளுக்கும் மூளைக்கும் அப்பாற்பட்ட மொழி இல்லாத அந்த மெல்லிய சத்தம், என் இயேசுவுடைய சத்தம், வேதனையும் கண்ணீரும் கலந்த ஒரு சத்தம், என்னுள் ஒலிக்க ஆரம்பித்தது... ***" இல்லை மகனே, இது நான் செய்தது அல்ல.....நான் அனுமதித்ததும்***

***அல்ல..... ".*** அந்த சத்தத்தின் பின்னணியில் இருந்த இயேசுவின் வேதனையை அவரது முகத்தின் காட்சியை, அவரது கண்களில் கட்டி நின்ற கண்ணீரை நான் என் ஆவிக்குரிய கண்களால் உணர்ந்து கொண்டேன். இந்த தடவை மதத்தின் கொடிய கூக்குரல்கள் என் குரல்வளையை நெரிக்க, சிந்தனையை தடுக்க, அறிவை செயல் இழக்காமல் செய்ய நான் அனுமதிக்க வில்லை. தேவனே ! எது சத்தியம் என எனக்கு சொல்லிதாரும் என்று வேண்டினேன். பரிசுத்த ஆவியானவர் அன்பாக வேதாகமத்தின் மூலம் எனக்கு தெளிவு படுத்தினார்.

அதில் இருந்து என் வாழ்க்கையில், ஊழியத்தில், பழகும் முறைகளில் பெரிய மாற்றம். தேவனுடைய கிருபையை, அன்பை, பாசத்தை, கருணையை அறிந்து கொண்டேன். அதில் சில வெளிப்பாடுகளை இப்போது உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

## வானத்தில் இருந்து அக்கினி இறக்கி 102 பேரை கொன்ற எலியா;

***2 ராஜாக்கள் 1ம் அதிகாரம்.*** இங்கே ஒரு சம்பவத்தை நாம் காண்கிறோம். அகசியா ராஜாவினால் அனுப்பப்பட்ட 102 வீரர்கள், எலியாவிடம் 51, 51 பேராக இரண்டு முறை வந்து, தலைவன், ராஜா அழைப்பதாக சொல்லுகிறார். அதற்கு பதிலாக தேவனுடைய மனிதனாகிய எலியா, வானத்திலிருந்து தேவனுடைய அக்கினியை இறக்கி 102 பேரை கொல்கிறார். 12 ம் வசனம் **"தேவனுடைய அக்கினி** என்று குறிப்பிடுகிறது". இது பழைய ஏற்பாட்டில் நடந்த ஒரு சம்பவம். இப்போது இதைப்போன்ற ஒரு சம்பவத்தை புதிய ஏற்பாட்டில் பார்ப்போம்.

## இயேசுவும் அக்கினியும்;

***லூக் 9:51*** *பின்பு, அவர் எடுத்துக்கொள்ளப்படும் நாட்கள் சமீபித்தபோது, அவர் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பி,* ***52*** *தமக்கு முன்னாகத் தூதர்களை அனுப்பினார். அவர்கள் போய், அவருக்கு இடத்தை ஆயத்தம்பண்ணும்படி சமாரியருடைய ஒரு கிராமத்திலே பிரவேசித்தார்கள்.*
***53*** *அவர் எருசலேமுக்குப் போக நோக்கமாயிருந்தபடியினால் அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.* ***54*** *அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டபோது: ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள்.* ***55*** *அவர் திரும்பிப்பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி,* ***56*** *மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார். அதன்பின்பு அவர்கள் வேறொரு கிராமத்துக்குப் போனார்கள்.*

இந்த இரு வேதாகம பகுதிகளையும் நீங்கள் படித்து பார்த்தால் தெரியும், சமாரியர் செய்தது பெரிய குற்றம். எலியாவிடம் வந்த வீரர்கள் தங்கள் கடமையை மாத்திரம் செய்தார்கள். ஆனால் சமாரியரோ ஜீவனுள்ள தேவனுடைய குமாரனையே வெறுக்கிறார்கள். எலியா அக்கினி இறக்கிய நிகழ்ச்சி யாக்கோபுக்கும் யோவானுக்கும் தெரியும். அதனால்தான் அது போல நாங்களும் செய்யட்டுமா? என்று கேட்கிறார்கள். அதற்காக இயேசு கிறிஸ்து அவர்களை அதட்டுகிறார். ***"நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள்"*** என்று அதட்டுகிறார். எலியாவின் சமயத்தில் இயேசு கிறிஸ்து இருந்திருந்தால் அவரையும் நிச்சயமாக அதட்டி இருப்பார். இன்றைக்கு இயேசு தன் சரீரத்தில் இருந்து இருந்தால், இந்த உலகத்தின் ஏதாவது ஒரு நகரத்தில் நடக்கும் பாவச்செயல்களை பார்த்து, எலியா, யாக்கோபு, யோவான் போன்ற ஏதாவது ஒரு ஊழியக்காரர்கள் **" தேவன் அக்கினி அனுப்பினார், சுனாமியை அனுப்பினார், அழிவை அனுப்பினார் என்று சொல்வார்களானால்,** அவர்களையும் பார்த்து ***"நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள்"*** என்று அதட்டதான் செய்வார்.

## பழைய ஏற்பாட்டு நியாயத்தீர்ப்பும், புதிய ஏற்பாட்டு கிருபையும்;

வேதாகமத்தில் இருந்து கோட்பாடுகளை போதிப்பதற்கு முன்பதாக நாம் சில அடிப்படையான காரியங்களை அறிந்து கொள்வது அவசியம். ஏன் வேதாகமத்தில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரண்டு பகுதிகள் இருக்கின்றன ?. தேவன் கொடுத்த நியாயப்பிரமாணத்துக்கும் கிருபைக்கும் உள்ள வித்யாசம் என்ன? இந்த இரண்டில் நாம் எதற்கு கீழ்ப்பட்டவர்கள் ?. ஏன் பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் தேவன் கடுமையான தண்டனைகள் கொடுத்தார் ? **ஆனால் இயேசு என் அப்படி செய்ய வில்லை ?** விபசாரத்தில் ஈடுபட்ட பெண்ணை கூட "நீ போ. இனி பாவம் செய்யாதே " என்று அனுப்பி வைக்கிறார். வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **உடன்படிக்கை** என்பது என்ன ?. வேதாகமத்தில் ஏன் பல விதமான யுகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன ? ***( எபி; 1;1-4 ).*** இவற்றை பற்றி

எல்லாம் நன்கு அறிந்து கொண்டு அதன்பின் வேதாகம கோட்பாடுகளை பற்றி பேசுவது நல்லது. **இவைகள் தெரியாமல் இருக்கும் போது, இயேசு கிறிஸ்துவின் கிருபையை, அன்பை, கருணையை மாத்திரம் போதிப்பது மிக மிக பாதுகாப்பானது, நல்லது. அது பலரையும் இயேசுவுக்குள் கொண்டு வரும்.**

## பழைய ஏற்பாட்டுக்கும், புதிய ஏற்பாட்டுக்கும் உள்ள வேறுபாடு;

"ஏற்பாடு" என்கிற தமிழ் வார்த்தைக்கான கிரேக்க வார்த்தை "டையதிக" என்பதாகும். இதன் அர்த்தம் "*ஏற்பாடு, ஒப்பந்தம், எழுதி வைக்கப்பட்டுள்ள ஒரு மனிதருடைய உயில், உடன்படிக்கை* ". வேதாகமத்தில் டையதிக என்னும் இவ்வார்த்தை சுமார் 20 முறை "உடன்படிக்கை" என்றும், சுமார் 13 முறை "ஏற்பாடு" ஏன்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

எப்பொழுதும் ஏதாவது ஒன்று "புதியது" என்று வரும்போது, அது பழையதை விட உயர்ந்ததாக, அதிக உபயோகமாக, எளிதாக, இருக்கும். இதற்கு அர்த்தம் பழையது உபயோகம் இல்லாதது, அதை வீசி எறிந்து விட வேண்டும் என்பதல்ல. அதன் உபயோகம் முடிந்து விட்டது என்று அர்த்தம். வேதாகமத்தில் சுமார் 85 இடங்களில் பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்கும் உள்ள வித்தியாசம், புதிய ஏற்பாட்டின் கூடுதல் மகிமை ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் இருந்து சிலவற்றை பார்ப்போம்.

***கொலோ; 2;13-17. கொலோ 2:16*** *ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. 17 அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது.*

இவ்வசனங்கள் சொல்லுகின்றன, பழைய ஏற்பாடு ஒரு நிழலாயிருக்கிறது என்று. நிழல் என்பது நிஜம் அல்ல, அது ஒரு நிஜமான பொருள் அல்லது மனிதரைப்பற்றி நமக்கு தகவல்களை தருவது. உதாரணத்துக்கு ஒரு புகைப்படத்தை எடுத்துக்கொள்வோம். ஒரு சகோதரன் திருமணம் செய்யுமுன்பாக முதலில் ஒரு பெண்ணின் புகைப்படம் கொடுக்கப்படுகிறது என வைத்துக்கொள்வோம். அந்த புகைப்படத்தில் இருந்து அந்த பெண்ணைப்பற்றிய பல தகவல்களை அறியலாம். பின் திருமணம் நிச்சயிக்கப்பட்டு, திருமணம் முடிந்த பிறகு, அந்த புகைப்படத்தின் நோக்கம் நிறைவேறிமுடிந்தது. இப்போது அந்த சகோதரன் அந்த பெண்ணோடு வாழலாம். இன்னும் புகைப்படத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு அதையே பார்த்து, அதனோடு பேசி, பழகி, புகைப்படத்தோடு வாழ்ந்து கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. இது போலவே பழைய ஏற்பாடு என்பது இயேசு கிறிஸ்துவை பற்றிய தகவல்களை தரும் புகைப்படம். புதிய ஏற்பாடு என்பது நிஜம். புதிய ஏற்பாடு நிஜத்தை பற்றி குறிப்பிடுவது.

***1கொரி 10:6*** *அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது.*
***1கொரி 10:11*** *இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது.*

***2கொரி 3:9*** *ஆக்கினைத்தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால், நீதியைக்கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுள்ளதாயிருக்குமே. 10 இப்படியாக, மகிமைப்பட்டிருந்த அந்த ஊழியம் இந்த ஊழியத்திற்கு உண்டாயிருக்கிற சிறந்த மகிமைக்குமுன்பாக மகிமைப்பட்டதல்ல.*

## பழைய ஏற்பாட்டில் ஏன் கடுமையான தண்டைனைகளும், நியாயத்தீர்ப்பும் கொடுக்கப்பட்டன?.

வேதாகமத்தில் தேவன் பாவத்தை கணக்கிடாத, அதற்கு தக்க தண்டனைகளை கொடுக்காத சமயங்கள் இருந்ததாக வேதாகமம் குறிப்பிடுகிறது. இது வேதாகமத்தை அதிகமாக அறியாதவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கும்.

*ரோம 5:13* ***நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது.***

*2கொரி 5:19* ***அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.***

பழைய ஏற்பாட்டில் தேவன் மனிதர்களோடு அவர்களுடைய **"வெளியான மனிதன்"** மூலமாகவே தொடர்பு கொண்டிருந்தார். பழைய ஏற்பாட்டு மனிதர்கள் மறுபடியும் பிறக்காதவர்களாக இருந்ததால் தேவன் அவர்களுடைய **"உள்ளான மனிதனோடு"** தொடர்பு கொள்ள முடியாமல் இருந்தது. இதனால் பழைய ஏற்பாட்டு மனிதனுக்கு ஆவிக்குரிய உண்மைகளை அறிய முடியாமல் இருந்தது. இந்த ஆவிக்குரிய உண்மைகள் புதிய உடன்படிக்கையில், மறுபடியும் பிறந்த மனிதனுக்கு பரிசுத்த ஆவியால் வெளிப்படுத்திக்கொடுக்கப்பட முடியும்.

***1கொரி 2:14** ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். 15 ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.*

தேவன் ஏன் பழைய உடன்படிக்கை, புதிய உடன்படிக்கையை கொடுக்க வேண்டியதிருந்தது என்பதற்கு இது ஒரு முக்கியமான காரணம் ஆகும். பழைய ஏற்பாட்டு மனிதன், ஆவிக்குரிய உண்மைகளை அறிந்து கொள்வதில் ஒரு வளரும் சிறுவனைப்போல இருந்தான். ***( மத்;11;11. ரோமர்; 16;25. 1;கொரி;2;14. கொலோ;1;26-27. 1 பேதுரு;1;10-11).*** ஒரு சிறுவனுக்கு ஆவிக்குரிய உண்மைகளை விளக்கி கொடுத்து கற்பித்து கொடுப்பது என்பது முடியாத காரியம். ஆனாலும் பாவத்தை எதிர்த்து அதன் தீமைகளில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக அந்த குழந்தை கற்பித்துக்கொடுக்கப்பட வேண்டும். இல்லையென்றால் அந்த குழந்தை பாவத்துக்கு கீழ்ப்படியும். இதற்காகத்தான் வேதாகமம் "சீர்திருத்தும் பிரம்பை" கையாள வேண்டும் என்று சொல்லுகிறது. ***( நீதி;13;24. 19;18. 22;15 ).*** ஒரு குழந்தைக்கு மின்சார பிரமாணங்கள், கோட்பாடுகள், அதன் ஆபத்து விளைவுகள் இவைகள் எல்லாம் புரியாது. ஆனால் மின்சாரத்தின் ஆபத்தில் இருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆகவே பல குழந்தைகளையும் நாம் பழக்கப்படுத்தி வைத்திருப்பது, அந்த குழந்தைக்கு மின்சாரம் என்றால் என்ன என்று தெரியாது, ஆனால் மின்சார உபகரணங்களை பாயின்றுகளை தொட்டால் அடி கிடைக்கும், அல்லது அம்மா சத்தம் போடுவார்கள் என்று தெரியும். அதனால் அது அவற்றை தொடாது.

இப்படித்தான் பழைய ஏற்பாட்டு மக்கள் இருந்தார்கள். அவர்கள் பாவத்துக்கு விலகி இருந்தது, தேவனால் தண்டிக்கப்படுவோம் அல்லது அவரது கோபாக்கினைக்கு ஆளாவோம் என்ற காரணத்தால். இதை தேவன் செயல் படுத்தியது நியாயப்பிரமாணம் மூலமாக. ***( குறிப்பு; நியாயப்பிரமாணம், நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதன் நோக்கம், நியாயப்பிரமாணத்தின் உபயோகம் இவைகளைப்பற்றி நீங்கள் அறிய விரும்பினால், தயவு செய்து என் " நாம் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல, கிருபைக்கு கீழ்ப்பட்டவர்கள் " என்ற வேத பாடத்தை படிக்கவும். அது பல அடிப்படை மாற்றங்களை உங்களிடம் உருவாக்கும் ).*** நியாயப்பிரமாணத்தை கொடுத்த தேவன் அதை பூரணமாக நிறைவேற்ற வேண்டியதிருந்தது. அல்லது நியாயப்பிரமாணம் உபயோகமில்லாமல் இருக்கும். அதனால்தான் பல தண்டனைகளும், தேவனுடைய கோபாக்கினையும், நோய்களும், மரணங்களும், கொள்ளை நோய்கள், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி போன்ற பேரழிவுகளும் கொடுக்கப்பட்டன. என்றாலும் அது தேவனுடைய சித்தமோ, விருப்பமோ, சுபாவமோ அல்ல. அதனால்தான் ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த பிறகும் சுமார் 2000 வருடங்களுக்கு தேவன் நியாயப்பிரமாணத்தை கொடுக்க வில்லை. அதன் பிறகே கொடுத்தார்.

புதிய ஏற்பாட்டில், நம்முடைய பாவங்களுக்கான தண்டனை முழுவதும் இயேசு கிறிஸ்துவின் மேல் சுமத்தப்பட்டது. ( ***யோவான்; 1;29, 2 கொரி; 5;21, 1 பேதுரு; 2;24, ஏசா 53:6 .யோவா 4:42 ரோம 5:19 .1தீமோ 4:10. எபி 9:28 .யோவா 3:16 - 17, யோவான்; 6;33, 51, ஐசாயா; 53;11-12, 1 யோவான்; 4;14, எபி;2;9.1 தீமோ; 2;6. ).*** இப்போது தேவன் யாரையும், எந்த தேசத்தையும், நாட்டையும் அவர்களது தனிப்பட்ட செயல்களுக்காக தண்டிக்க வேண்டியது இல்லை. **மனிதர்கள் தண்டிப்பார்கள். இந்த உலகம், அரசாங்கம், இயற்கை தண்டிக்கும். சாத்தான் தண்டிப்பான். (** ***யோவான்;10;10).*** இப்போது நாம் தேவனுடைய தண்டனைக்கு அவரது கோபாக்கினைக்கு பயந்து பாவம் செய்யாமல் இருப்பதில்லை. இதைத்தான் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்ட " குழந்தைகள்" செய்தது ( ***கலா; 3;23-26*** ). இப்போது தேவன் அவருடைய குமாரனின் ஆவியை நமக்குள் அனுப்பி நம்மை அவரது பிள்ளைகள் ஆக்கி இருப்பதனால், நாம் இப்போது அந்த மாபெரும் அன்புக்கு கட்டுப்பட்டு பாவம் செய்யாமல் இருக்கிறோம். ( அல்லேலுயா ! ). மறுபிறப்பினால் நம்முடைய

சுபாவமே மாற்றப்பட்டு இருப்பதனால் நாம் இப்போது பாவம் செய்யாமல் இருக்கிறோம். **இப்போது நியாயப்பிரமாணம் நிறைவேற்றப்பட்டு விட்டதால் தேவன் அதன் மூலமாக கொடுக்கப்பட்ட தண்டனைகள், அழிவுகள், மரணங்கள், நிலநடுக்கம், கொள்ளை நோய்கள், சுனாமி போன்றவற்றை கொடுக்க தேவை இல்லை. கொடுக்கவும் முடியாது. நம் தேவன் சர்வ வல்லவர், அவரால் கொடுக்க இயலாது என்று நான் சொல்ல வில்லை, அவரது குமாரன் இயேசு கிறிஸ்து உலகத்தின் தண்டனைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டதால், அந்த தண்டனைகளை தேவன் இனி வேறு ஒரு சாதாரண மனிதனுக்கு கொடுக்க முடியாது. அப்படி கொடுப்பது, இயேசு அந்த தண்டனைகளை சரியாக ஏற்றுக்கொள்ள வில்லை என்று அர்த்தமாகும். இயேசுவின் சரீரத்தின் மேல் விழுந்த ஒரு அடி இவ்வுலகத்தின் மொத்த மக்களின் மரண வேதனையை விட மேலானது.**

***யோவா 5:19*** *அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்.*

***யோவா 8:29*** *என்னை அனுப்பினவர் என்னுடனே கூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை என்றார்.*

இயேசு கிறிஸ்து எப்போதும் பிதாவுக்கு பிரியமானவைகளையே செய்கிறவர். அவர் நித்தியமாக பிதா செய்கிறதை பார்த்து அப்படியே செய்கிறவர். **இயேசு கிறிஸ்து தான் பூமியில் வாழ்ந்த சமயத்தில் யாருக்காவது நோய் கொடுத்திருக்கிறாரா ? எந்த நாட்டிலாவது சுனாமி, பஞ்சம், பட்டினி, அழிவு, கொலைகள், கொள்ளை நோய்கள், நில நடுக்கங்கள், அக்கினி போன்றவற்றை அனுப்பியிருக்கிறாரா?**

## பழைய ஏற்பாட்டின் சில நியாயத்தீர்ப்புகளும் அவற்றுக்கான காரணங்களும்;

பலரும் அறியாமையினால் நினைத்துக்கொண்டிருப்பது பழைய ஏற்பாட்டில் தேவன் கொடூரமாக இருந்தார். புதிய ஏற்பாட்டில் அவர் சற்று விட்டு கொடுத்திருக்கிறார் என்று. அப்படி அல்ல. அது நம் தேவனுடைய சுபாவத்தை பற்றி அறியாதவர்கள் சொல்லுவது. நம் தேவனுடைய சுபாவத்தை மிகவும் தீர்மானமாக சொல்லுகிற வசனம்

***1யோவா 4:8*** *அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்.*

அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவர் என்றும் அன்பாகவே இருக்கிறார். ( ***எபி;13;8, மல்;3;6*** ). பழைய ஏற்பாட்டில் சில இடங்களில் கடுமையான சில அழிவுகளை நாம் பார்க்க முடியும். உதாரணத்துக்கு நோவாவின் காலத்து ஜலப்பிரளயம், சோதோம் கொமாரா அழிப்பு போன்றவை. இன்னும் வாக்குத்தத்த நாட்டுக்குள் பிரவேசிக்கும்போது தேவன் இஸ்ரவேல் ஜனங்களின் தலைவர்களுக்கு கொடுக்கும் கட்டளை, அந்த தேசங்களில் வசிக்கும் அந்நிய மக்களை முழுவதுமாக, அதாவது சிறுபிள்ளைகள், பெரியவர்கள், கர்ப்பிணிகள், ஆண்கள் பெண்கள் அனைவரையும், மிருகங்களையும் சேர்த்து.

*1சாமு 15:3* ***இப்பொழுதும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுபோடக்கடவாய் என்கிறார் என்று சொன்னான்.***

பல வருடங்களுக்கு முன்பதாக நான் மும்பையில் வேலை செய்து கொண்டிருந்த போது மதக்கலவரம் வெடித்தது. அப்பாவி மக்கள் மதத்தின் பேரால், தெய்வத்தின் பேரால் கொல்லப்படுவதை என் கண்களால் காண நேர்ந்தது. எரிந்து போன சடலங்கள், சூறையாடப்பட்ட கடைகள், தகப்பனை இழந்த பிஞ்சு குழந்தைகள், நோயின் காரணமாக இரண்டு கால்களும் செயல்படாமல் வீட்டில் இருந்து கொடூரர்கள் வீசிய நெருப்பினால் எரிந்து போன ஒரு இளம்பெண், கொலை, கொள்ளை, கற்பழிப்புகள். "மிருகம் எப்படி பல ஆயிரக்கணக்கான வருடங்களில் மனிதனாக உருமாற முடியும் என்பது அப்போது எனக்கு புரியாமல் இருந்தது. ஆனால் ஒரு நொடியில் மதத்தின் பேரால் **மனிதன் மிருகமாக மாறுவதை** என் கண்களால் நான் கண்டேன்." அந்த சமயத்தில் பல நல்லெண்ணம் கொண்ட மனிதர்கள் பத்திரிகைகளில் மதங்களை பற்றி பல விஷயங்களை எழுதினார்கள். மதத்தின் பேரால் உலகத்தில் நடந்தேறிய பல அழிவுகளை பட்டில் இட்டிருந்தனர். அதற்கு கிறிஸ்தவ மக்கள் பலர் எங்கள் தேவன் அன்பானவர், இயேசு கிறிஸ்து அன்பானவர் என்கிற விதத்தில் பதில்

சொன்னார்கள். அப்போது மும்பையில் மிகவும் பிரபலமான ஒரு எழுத்தாசிரியர் கிறிஸ்தவர்களின் இந்த பதிலுக்கு பதிலாக ஒரு கட்டுரை எழுதி இருந்தார். அதில் அவர் வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் இருந்து பல பகுதிகளை - நோவாவின் ஜலபிரளயம், சோதோம் கொமாரா, குழந்தைகள் கர்ப்பிணிகள் உட்பட சகலரையும் கொல்ல வேண்டும் என்று தேவன் கொடுத்த கட்டளைப்பகுதிகளை, தேவன் அனுப்பிய கொள்ளை நோய்களை, அழிவுகளை - அதிகாரம், வசனத்துடன் சுட்டிக்காட்டி, **இப்படி எல்லாம் கொல்ல சொல்லுகிற, அழிக்க சொல்லுகிற, அழிக்கிற, கொல்லுகிற, அல்லது அதை தடுக்க முடிகிற வல்லமை இருந்தும் தடுக்காமல் இருக்கிற தேவன் எப்படி அன்பானவர் என்று சொல்ல முடியும்** ?, என்று கேள்வி எழுப்பி இருந்தார். அதற்கு ஒரு கிறிஸ்தவனால் கூட சரியான பதில் சொல்ல முடிய வில்லை. காலங்களாக என் மனதில் ஆழப்பதிந்திருந்து மறக்க முடியாத, மறுக்க முடியாத ஒரு கேள்வி அது.

பலவருடங்களுக்கு பிறகு நான் பரிசுத்த ஆவியானவருடன் பேசுகிற, பழகுகிற, அவருடன் நடைப்பயிற்சி செய்கிற பழக்கங்களை தொடங்கிய பிறகு ஒரு நாள் நான் பரிசுத்த ஆவியானவரிடம் இக்கேள்வியை கேட்டேன். அப்பா ! பிதாவே ! எதற்காக இப்படி எல்லாம் செய்தீர் ?. அதற்கு ஆவியானவர் கொடுத்த பதில்,..... **"உனக்காக".!** எனக்கு புரிய வில்லை. பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாட்டோடு வேதத்தை ஆராய்ந்த போது சரியான பதிலை புரிந்து கொண்டேன். அதில் சில குறிப்புகளை மாத்திரம் இங்கே கொடுக்கிறேன். உங்கள் பல கேள்விகளுக்கும் அதில் இருந்து விடை பெற்றுக்கொள்ளலாம்.

தேவன் கடுமையான அழிவை, கொலையை கட்டளையிட்ட சில இடங்களை இப்போது உதாரணத்துக்கு பார்ப்போம்;

***உபாகமம்; 7;2, 12;2, 20;17. யோசுவா; 11;11-14. எண்ணாகமம்; 31;1,2, 9-35, நியாயாதிபதிகள்; 21;11. எரே;50;21. 1 சாமு;18;26. சங்;136;10,***

***ஆதியாகமம் 6;1-6*** வரை உள்ள வசனங்களை பார்ப்போமானால், தேவன் பூமியில் ஜலப்பிரளயத்தை அனுப்பினதன் காரணங்களை குறிப்பிடுகிறார்.

***ஆதி 6:5*** *மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு,* ***6*** *தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது.*

***ஆதி 18:20*** *பின்பு கர்த்தர் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும்,*

உலக மக்களின் பாவம் வேதாகமத்தின் 6 அதிகாரங்கள் முடிவதற்குள், இன்னும் நாம் கண்டிராத அளவுக்கு உலகத்தில் பெருகினது. மனிதன் அடிப்படையிலேயே பொல்லாதவர்கள் ஆனார்கள். தேவன் தான் மனிதனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபம் படுமளவுக்கு உலகத்தில் பாவம் பெருகினது.

தேவன், மனிதன் பாவம் செய்யு முன்பே மனிதனுடைய மீட்பின் திட்டத்தை தயாராக வைத்திருந்தார். இயேசு கிறிஸ்து மனிதகுலத்தின் மீட்பராக ஒரு கன்னிகை மூலமாக இந்த பூமிக்கு வந்து, ஏதேன் தோட்டத்தில் இழந்து போனதை அவர் மீட்பார். இது தேவனுடைய திட்டம். இதை விட்டால் இதற்கு அடுத்த திட்டம் என்ற ஒன்று தேவனிடம் இல்லை.

***ஆதி 3:15*** *உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.*

***வெளி 13:8*** *உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள்யாவரும் அதை வணங்குவார்கள்.*

***(அப்;15;18, தீத்து;1;2, 1 பேதுரு; 1;20 )***

வேதாகமம் ரோமர் 5;13 ல் சோல்லுகிறது, " ***ரோம 5:13 நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது.***

தேவன் மனிதனின் பாவத்தை எண்ணாதிருந்தார். இதனால் மனிதர்கள் தங்களை தங்களுக்குள் ஒப்பிட்டு பார்த்துக்கொண்டு பாவத்தில் ஆழ்ந்து போனார்கள். இதனால் சாத்தானின் அடிமைகளாகி ( ***ரோமர்; 6;16*** ) சாத்தானால் அழிக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இதை அறியாமல் இருந்தார்கள்.

பாவம் மிகவும் கோடூரமாகி, ஒரு சமயத்தில் ( ***ஆதி;6;5*** ) பூமியில் தேவனுடைய சொல் கேட்பவர்களாக எட்டு பேர் மாத்திரமே மிஞ்சினார்கள். மனுஷனை உண்டாக்கினதற்காக தேவன் வருத்தப்படும் அளவுக்கு மனிதரின் பாவம் இருந்தது. இந்த பொல்லாதவர்களை முழுவதுமாக அழிக்க தேவன் ஜலப்பிரளயத்தை அனுப்புகிறார். **தேவன் இப்படி ஒரு செயலை செய்யாமல் இருந்திருந்தால், தேவனுக்கு கீழ்ப்படிந்தவர்களாக பூமியில் யாரும் இல்லாமல் இருந்திருப்பார்கள், நமக்கான மீட்பின் திட்டம் செயல் படுத்தப்பட்டிருக்க முடியாது.** தேவன் தன் அன்பினால் பூமியில் வாழ்ந்தவர்களுக்கும், வாழப்போகிறவர்களுக்கும் இந்த மீட்பின் திட்டத்தை வைத்திருந்தார். இந்த திட்டதை செயல் படுத்தப் போகிறவர் இயேசு கிறிஸ்து. அவர் சீரழிந்த மரபில் இருந்து பிறக்காத ஒரு பெண் மூலமாகவே பிறக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவை கர்ப்பப்பையில் சுமக்கப்போகிற பெண், ஒரு கன்னிகையாக, களங்கமற்றவளாக, தேவனுக்கு கீழ்ப்படிந்து பரிசுத்த ஆவியானவர் கிரியை நடப்பிக்கும்படியாக அனுமதிக்கிற பெண்ணாக இருக்க வேண்டும். **தேவன் ஜலப் பிரளயத்தை அனுப்பாமல் இருந்திருந்தால் இயேசு கிறிஸ்து பிறக்க தகுதியான ஒரு கன்னிகை பூமியில் இல்லாதிருந்திருப்பாள்.** ஏனென்றால் அந்த அளவுக்கு பூமியில் பாவம் கொடூரமாக இருந்தது.

சோதோம் கொமாரா பட்டணத்துக்கு நேர்ந்தவற்றுக்கும், தேவன் மற்ற இடங்களில் எல்லோரையும் கொலை செய்யும் படியாக சொல்லுவதற்கும் காரணம் இதுவே. இந்த மக்களின் பாவம் மிகவும் கொடியதாக இருந்தது. தேவன் அப்படியே அவர்களை விட்டு வைத்திருந்தால், வாக்குத்தத்த நாட்டில் இயேசு கிறிஸ்து பிறக்கும்படியான ஒரு கன்னிகை இருந்திருக்க மாட்டாள். தேவன் அப்போது என்னை, நம்மை, உங்களை பார்க்கிறார். என்னையும், உங்களையும், நம்மையும், ரட்சிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும் லட்சோப லட்சம் மக்களையும் எண்ணி பார்க்கிறார். நாமும், இதற்கு முன்பு இருந்தவர்களும் ரட்சிக்கப்பட வேண்டுமென்றால் அதற்கு ஒரே வழி - தேவனுடைய மீட்பின் திட்டத்தை உருக்குலைக்கும் சாத்தானின் திட்டத்துக்கு அடிபணிந்து நடந்து கொண்டிருக்கும், சாத்தானின் திட்டத்தை செயல் படுத்திக்கொண்டிருக்கும் இந்த மக்கள் அழிக்கப்பட வேண்டும். வேதாகமத்தின் பல இடங்களிலும் அவர்கள் எப்பட்டிப்பட்ட ஒரு சீரழிந்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. பல வேதாகம விளக்க உரைகளை படிக்கும்போது நாம் இப்போது உலகத்தில் காண்கிற பாவநிலமையை விட மிக மோசமான நிலையில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள், அவர்களது மிருகங்களும் கூட அசுத்த ஆவிகளால் பீடிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு மறுபடியும் பிறக்க முடியாது. இந்த உலகம் ரட்சிக்கப்பட வேண்டுமென்றால் அவர்கள் அழிக்கப்பட வேண்டும். ஆகவே தேவன் அவர்களை அழித்தார். **இது ஒரு சரீரத்திலிருந்து அழுகிப்போன பகுதியை மாத்திரம் வெட்டி எடுத்து, அதன் மூலம் மற்ற பகுதிகளை காப்பாற்றுவது போன்றதாகும்.** அந்த அழுகிப்போன பகுதியை வெட்டி எடுப்பது, அதன் மீது நியாயத்தீர்ப்பு என்றாலும், அந்த செயல் மொத்த சரீரத்தின் மேல் காண்பிக்கப்படும் கருணை. **தேவன் பழைய ஏற்பாட்டில் செய்த, அனுப்பிய அழிவுகள், கொலைகள்- இவை, அந்த மக்கள் மேல் தேவனுடைய கோப நியாயத்தீர்ப்புகள் என்றாலும், உங்களையும் என்னையும், வருங்கால சந்ததியையும் மீட்கும்படியாக அவர் செய்தவைகள். இவை அனைத்தும் உலகத்தின் மேல் அவர் வைத்திருந்த அவரது இரக்கத்தின், அன்பின் செயல்களே.**

நம் தேவன் அன்பானவர். அவர் பாவிகளை அழிக்க விரும்புவதில்லை. அவர்கள் எப்படியாவது மனந்திரும்ப வேண்டும் என்றே விரும்புகிறார். அவர் நீதிமான்களின் மரணத்தை மட்டுமல்ல, பாவிகளின் மரணத்தையும் விரும்பாதவர்.

***எசே 33:11*** *கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்:* ***நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல்,*** *துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாகவேண்டும் என்கிறார் என்று அவர்களோடே சொல்லு.*

***2பேது 3:9*** *தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.*

***எரே 29:11*** *நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.*

***யோவா 10:10*** *திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.*

***1தீமோ 2:4*** *எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.*

**இன்று உலகத்தில் நடக்கும் சம்பவங்களும், இரண்டாம் வருகையும்;**

பலரும் இன்று உலகத்தில் நடக்கும் பல சம்பவங்களையும் வேத வசனங்களோடு ஒப்பிட்டு எழுதுகிறார்கள். "இயேசுவின் இரண்டாம் வருகை சமீபித்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. அதை நான் முழுமையாக ஒத்துக்கொள்கிறேன், பிரசங்கிக்கிறேன் ". ஆனால் நாம் பல வசனங்களை எடுத்து அதற்காக உபயோகப்படுத்தும்போது கவனமாக உபயோகிக்க வேண்டும். பலரும் வழக்கமாக குறிப்பிடுகிற பல வசனங்கள் இப்போது நடப்பவைகளை குறிப்பிடுவது அல்ல. உதாரணத்துக்கு பலரும் **இன்றைய சுனாமி, நிலநடுக்கங்களை குறிப்பதாக** உபயோகிக்கிற சில வசனங்களை மாத்திரம் உதாரணத்துக்கு எடுத்துக்கொள்வோம்.

***எசே 26:19*** *கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் உன்னைக் குடியில்லாத நகரங்களைப்போலப் பாழான நகரமாக்கும்போதும், மிகுந்த தண்ணீர்கள் உன்னை மூடத்தக்கதாய் நான் உன்மேல் சமுத்திரத்தை வரப்பண்ணும்போதும்,*

எசேக்கியல் 26:1 - 28;20, வரை உள்ள வசனங்களை படித்து பார்த்தால், யாருக்கும் புரியும், இந்த தீர்க்க தரிசனம் **தீரு** (Eng; Tyre), எனப்பட்ட ஒரு புகழ்பெற்ற வியாபார ஸ்தலத்தை பற்றி குறிப்பிடுவது. இது கரையில் ஒரு பட்டிணமாகவும், கரையில் இருந்து சற்று தொலைவு கடலுக்குள் ஒரு பட்டினமாகவும் இருந்தது. இந்த தீர்க்க தரிசனம் எப்படி நிறைவேற்றப்பட்டது என்று பார்த்தால், கி.மு; 572 ம் வருடத்தில் கரையில் இருந்த பட்டிணம் நெபுகாத்நேச்சரால் 13 வருட போருக்கு பின் அழிக்கப்பட்டது. கடலில் இருந்த பட்டிணம் கி.மு.332 ம் வருடம் மகா அலெக்சாண்டரால் அழிக்கப்பட்டது. அன்றிலிருந்து இந்த இடங்கள் தீர்க்க தரிசி உரைத்தது போல அழிக்கப்பட்ட இடங்களாகவே இருந்தது. ( சில முன்னேற்றங்களை தவிர ).

இப்போது சொல்லுங்கள் ஏற்கனவே உரைக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட சம்பவங்களை குறிப்பிடும் இந்த வசனத்தை எடுத்து இப்போது நடக்கிற சுனாமிமை, நில நடுக்கங்களை குறிப்பிடுவதாக எப்படி உபயோகிக்கலாம் ?.

***எசே 14:13*** *மனுபுத்திரனே,* ***ஒரு தேசம்*** *எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணிக்கொண்டேயிருந்து, பாவஞ்செய்தால், நான் அதற்கு விரோதமாக என் கையைநீட்டி, அதில் அப்பம் என்னும் ஆதரவுகோலை முறித்து, அதில் பஞ்சத்தை அனுப்பி, மனுஷரையும் மிருகங்களையும் அதில் இராதபடிக்கு நாசம்பண்ணுவேன்.*

*Son of man, when* ***the land*** *sinneth against me by trespassing grievously, then will I stretch out mine hand upon it, and will break the staff of the bread thereof, and will send famine upon it, and will cut off man and beast from it:*

தமிழ் வேதாகமத்தில் **ஒரு** தேசம் என்று குறிப்பிடப்பட்டிருப்பது, ஆங்கில கிங் ஜேம்ஸ் வேதாகமத்தில் "the land" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது இது இப்போது இருக்கிற எந்த ஒரு தேசத்தையும் தனியாக குறிப்பிட்டு சொல்லப்படுவது அல்ல. எசேக்கியல் 14 ம் அதிகாரம் முழுவதையும் படித்து பார்த்தாலே இது நமக்கு நன்றாக புரியும்.

எசேக்கியல் 14ம் அதிகாரம் முழுவதும், எருசலேமிலும் யூதாவிலும் உள்ள விக்கிரக ஆராதனைகாரர்களை, மக்களை தேவன் சந்திக்கப்போவதை பற்றி குறிப்பிடுகிற தீர்க்கதரிசனம் ஆகும். இது முழுவதுமாக நிறைவேற்றப்பட்ட தீர்க்கதரிசனம். ( Dakes bible commentary ).

இதே அதிகாரத்தின் 21 ம் வசனம் இதை தெளிவாக விளக்கும்.

***எசே 14:21*** *ஆகையால், கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் மனுஷரையும் மிருகங்களையும் நாசம்பண்ணும்படி* ***எருசலேமுக்கு விரோதமாக****ப்பட்டயம், பஞ்சம், துஷ்டமிருகங்கள், கொள்ளைநோய் என்னும் இந்நான்கு கொடிய தண்டனைகளையும் அனுப்பும்போது எவ்வளவு அதிக சங்காரமாகும்?*

இப்போது சொல்லுங்கள் ஏற்கனவே உரைக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட சம்பவங்களை குறிப்பிடும் இந்த வசனத்தை எடுத்து இப்போது நடக்கிற சுனாமிமை, நில நடுக்கங்களை குறிப்பிடுவதாக எப்படி உபயோகிக்கலாம் ?.

***எசே 6:1*** *கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:*

***எசே 6:2*** *மனுபுத்திரனே, நீ இஸ்ரவேலின் பர்வதங்களுக்கு நேராக உன் முகத்தைத் திருப்பி, அவைகளுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்துச் சொல்லவேண்டியது என்னவென்றால்,*

***எசே 6:3 இஸ்ரவேலின் பர்வதங்களே,*** *கர்த்தராகிய ஆண்டவரின் வார்த்தையைக் கேளுங்கள்; கர்த்தராகிய ஆண்டவர் பர்வதங்களையும் குன்றுகளையும் ஓடைகளையும் பள்ளத்தாக்குகளையும் நோக்கி: இதோ, உங்கள்மேல் நான், நானே பட்டயத்தைவரப்பண்ணி, உங்கள் மேடைகளை அழித்துப்போடுவேன்.*

இந்த வசனங்கள் இஸ்ரவேலுக்கு உரைக்கப்பட்டவை என்று தெளிவாக புரியும். இவற்றை எப்படி நாம் இன்றைய சம்பவங்களை குறிப்பிடுவதாக சொல்லலாம் ?.

வேதாகமத்தில் நடந்து முடிந்த, நடக்கப்போகிற, இன்றைய சம்பவங்களை குறிப்பிடுகிற வசனங்கள், எடுத்துக்கொள்ளப்படுதல் (Rapture) ஐ குறிப்பிடுகிற வசனங்கள், எடுத்துக்கொள்ளப்படுதலுக்கும் இயேசுவின் இரண்டாம் வருகைக்கும் இடையில் நடக்கப்போகிறவற்றை குறிப்பிடுகிற வசனங்கள், இயேசுவின் இரண்டாம் வருகையை பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் வசனங்கள், ஆயிரம் வருட அரசாட்சியில் நடக்கப்போகிற சம்பவங்களை குறிப்பிடும் வசனங்கள், வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு, அதன் பிறகு நடக்கப்போகிறதை குறிக்கும் வசனங்கள், புதிய பூமி அதில் நடக்கப்போகிறவற்றை குறிப்பிடுகிற வசனங்கள் என்று தெளிவான வசனங்கள் உண்டு. நாம் அவற்றை உபயோகப்படுத்தும்போது அந்த அதிகாரம், புத்தகம் முழுவதையும் படித்து பார்த்து, முடியுமானால் வேத பண்டிதர்களின் விளக்க உரைகளையும் படித்து, எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு குறிப்பிட்ட விஷயத்தை பற்றி பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாட்டை நன்கு அறிந்து கொண்டு அதன்பிறகு பிரசங்கிக்க, எழுத முன்வருவது நலமாக இருக்கும்.

## இன்றைய அழிவுகளுக்கு எல்லாம் யார் காரணம் ?

இந்த கேள்விக்கு என் பதில் உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் அதுவே உண்மை.

**இதற்கு** முதல் காரணம் " நாம் ". இன்னும் தெளிவாக சொல்லப்போனால் **"நான்"** காரணம். எப்படி என்றால், நான், நாம் சரியாக சுவிஷேஷம் பிரசங்கித்திருந்தால், ஆதி அப்போஸ்தலர் போல அற்புதங்களோடு அடையாளங்களோடு பிரசங்கித்திருந்தால் இன்று உலகத்தின் பல நாடுகள் விசுவாசிகள் நிறைந்ததாக மாறி இருக்கும். தேவனுடைய புது உடன் படிக்கையின் படி, **இயற்கையின் சீற்றங்களில்** இருந்து நமக்கு பாதுகாப்பு இருந்திருக்கும். பலர் பாவிகளாக கொடூர பாவச்செயல்களை செய்வது தடுக்கப்பட்டிருக்கும். பலரும் இயேசுவை ஏற்றுக்கொள்ளாததன் ஒரு காரணம், விசுவாசிகள் **"நற்செய்தியை"** பிரசங்கிப்பதற்கு பதிலாக **" நடுங்கவைக்கும் செய்திகளை "** பிரசங்கிப்பது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை சத்தியம். நிச்சமாக நடக்கப்போகிற ஒன்று. ஆனால் அது "நற்செய்தி" அல்ல. பலரும் நரகத்துக்கு செல்லப்போவது நற்செய்தி அல்ல. இயேசு, மாற்கு 16;15-18, மத்;28;18-20 குறிப்பிட்டுள்ள நற்செய்தியை நாம் கிருபையோடு பிரசங்கித்தால் பலரும் இயேசுவை ஏற்றுக்கொள்வார்கள். இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாக இருப்பார்கள். **முதலில் நாம் இயேசுவின் "முதலாம் வருகையை" கிருபையோடு பிரசங்கிப்போம். அதன் பிறகு இரண்டாம் வருகையை பற்றி சொல்லிக்கொடுப்போம்.**

***2கொரி 5:17*** *இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.*

*18 இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.*

*19 அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.*

*20 ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.*

இயேசு நமக்கு தந்திருக்கும் ஊழியம் **"ஒப்புரவாக்குதலின் ஊழியம்".** இதை சரியாக அறிந்து கொண்டு **"சரியான சுவிஷேஷத்தை"** பிரசங்கிப்போம். பவுல் அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ள **"வேறொரு சுவிஷேஷம்"** பிரசங்கிக்க வேண்டாம். நாம் சரியான சுவிஷேஷம் பிரசங்கிக்கிறோமா ? அல்லது "வேறொரு சுவிஷேஷம்" பிரசங்கிக்கிறோமா என்பதை வேதாகமத்தின் வெளிச்சத்தில் அறிந்து கொள்வோம். ( ***குறிப்பு; "வேறொரு சுவிஷேஷம்" என்றால் என்ன என்று நீங்கள் அறிய விரும்பினால் தயவு செய்து என்னுடைய "வேறொரு சுவிஷேஷம்" என்ற வேத பாடத்தை படிக்கவும்*** )

***கலா 1:6*** *உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்கு திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; 7 வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. 8 நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். 9 முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.*

தேவனுடைய கிருபையை சரியாக பிரசங்கித்தால் அது உலகத்தை மாற்றும்..

***தீத் 2:11*** *ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, 12 நாம் அவபக்தியையும் லௌகிகஇச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி, 13 நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப்போதிக்கிறது.*

இரண்டாவது காரணம் சாத்தான்.

***யோவா 10:10*** *திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.*

மூன்றாவது காரணம்.

இவற்றில் பல "இயற்கையின் சீற்றங்கள்". பழைய ஏற்பாட்டில் நடந்த அழிவுகளில் கூட எல்லா அழிவுகளுமே தேவன் செய்தது அல்ல. சரித்திரத்தை எடுத்து பார்த்தால் பல அழிவுகள் நாம் இன்று காண்பது போல நடந்திருக்கின்றன. இன்றைய மீடியாவினால் உடனே எல்லாருக்கும் தெரிந்து விடுகிறது.

நான்காவது காரணம்.

***கலா 6:7*** *மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.*

பல துன்பங்களுக்கு காரணம் சாத்தானோ, இயற்கையோ அல்ல. மனிதன், தேசங்கள் தாங்கள் விதைத்ததை அறுப்பது.

பிசாசுக்கு எதிர்த்து நிற்போம். அழிவுகளை எல்லாம் தேவன் தலையில் போட்டுவிடுவது சாத்தானுக்கு கொண்டாட்டமாகி விடும்.

***யாக் 4:7*** *ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.*

***மத் 28:18*** *அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.*

***19*** *ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,*

***20*** *நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*

நம் தேவன் நல்லவர். நேற்றும் இன்றும் என்றும் அவர் அன்பானவர். அவர் மேல் குற்றம் சுமத்துவதை விட்டு, நம் கடமையை செய்வோம். சுவிஷேஷம் பிரசங்கிப்போம். சீஷர்களை உருவாக்குவோம். நீங்கள் ரட்சிக்கப்பட்டவர்கள் நிங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் ( எபே; 1.3 ). மற்றவர்களையும் இந்த ரட்சிப்புக்குள், தேவனுடைய பாதுகாப்புக்குள், நன்மைக்குள், ஆசீர்வாதத்துக்குள் நடத்துங்கள்.
ஆமென்.

(**Reference;** Tamil Bible, King James version Bible, The Amplified Bible, Vines expository Dictionary of Bible words, Dakes Bible Commentary, Adam Clark Bible commentary, Andrew Wommack Bible commentary, Strong's Concordance, The True Nature of God – Book, and many other… )